கலந்து கொள்கிறோம். ஆகவே, இனிமேல் அமைச்சர் கேள்வி கள் இடம்பெற்றால், கண்டிப்பாகக் கலந்துகொள்ள தாங்கள் ஏற்பாடு செய்தால், அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரு மாறு.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதெல்லாம் சர்வ சாதாரணம். அவர்களுக்கு ஏதாவது திடீரென்று என்கேஜ் மென்ட், இன்கன்வீனியன்ஸ் ஏற்படலாம். ஆனால், அதைப் பற்றி பரிசீலித்து, அவ்வாறு இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேள்விப் பட்டியல் முன்னாலே வந்துவிடுகிறது. மாண்புமிகு அமைச்சர்கள் சட்ட சபைக்கு வரக் கூடாது என்பதல்ல. தவிர்க்க முடியாத சில பொது வேலைகள் வருகின்ற காரணத்தாலே இந்த நிலைமை ஏற்படுகின்றது. சான்றாக நேற்றைய தினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கேள்விகள் இடம் பெற்றிருந்தன. அவர் டெல்லி செல்ல வேண்டிய அவசரமான நிலை ஏற்பட்டது. அதைப்போலத்தான் ஒவ்வொரு அமைச்சர்களும் தங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். ஆனால் இந்தப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கவ னிக்க வேண்டியது, கேள்வி நேரம் என்பது ஒரு மணி நேரம் ; அந்த ஒரு மணி நேரமும் வினாக்கள்-விடைகள் நடைபெற் றனவா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர, யார் வந் தார்கள், யார் போனார்கள் என்று 'அட்டென்டென்ஸ்' எடுப்பது சரியானதல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லியாகி விட்டது உட்காருங்கள்.

ஆ. தஞ்சாவூர் பொருட்காட்சிக்கு கட்டாய வசூல்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத்தலைவர் அவர் களே, தஞ்சாவூரிலே நடைபெறுகிற பொருட்காட்சியிலே தொடர்ந்து அங்கே இருக்கிற சில அதிகாரிகள் 200, 500 என்று டிக்கட் அச்சடித்து கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாக பொது மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்திருக்கிறது. இது குறித்து மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் அளிக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதெல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே சொல்லுங்கள்.

இ. அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றதை சில பத்திரிகைகள் பிரசுரித்திருப்பது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்றையதினம் இந்தச் சட்டப்பேரவையிலே மதுராந்தகம் நிகழ்ச்சியைப் பற்றி பேசப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் தீர்ப்பு வழங்கினார். பல சம்பவங்கள் நீக்கப்பட்டன. அப்படி நீக்கப்பட்ட சம்பவங்கள் எல்லாம் இன்றையதினம் விஷமத்தன விமர்சனமாக சில பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அதிலே சில தகாத வார்த்தைகள் எல்லாம் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குறித்து எழுதிக் கொடுங்கள்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ரமணி, மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, ரா. கிருஷ்ணன், என். வரதராசன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர்—

" தமிழக அரசு அலுவலர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளுக்காக நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து " விவாதிக்க பேரவையின் இதர அலுவலர்களை ஒத்திவைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படிஅவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கும்படியான அரசு ஊழியர்கள் அவர்களுடைய சில முக்கியமான கோரிக்கைகளுக்காக நேரடி நடவடிக்கையிலே ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டதின் மீது சில வளர்ச்சிப் போக்குகள் ஏற்பட்டு வருவதை உடனடியாக கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.